श्रीः

श्रीमते रामानुजाय नमः

# श्रीरामानुजार्य नामावलिः (अष्टोत्तरशत)



உப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ உ வே வ.சடகோபய்யங்கார் (ந்யூயார்க்) இயற்றியது.

தமிழாக்கம் இணை: திருச்சித்ரகூடம் அரங்க.திருநாராயணன், ஸ்ரீரங்கம்.




श्री वरदर् - काञ्चीपुरम्



श्रीरामानुजार्यः - काञ्चीपुरम्



श्री:

श्रीमते रामानुजाय नमः

# श्रीरामानुजार्य नामावलिः (अष्टोत्तरशत)

உப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ உ வே வ.சடகோபய்யங்கார் (ந்யூயார்க்)
இயற்றியது.

தமிழாக்கம் இணை:

திருச்சித்ரகூடம் அரங்க.திருநாராயணன், ஸ்ரீரங்கம்.

✡✡✡✡

பகவத் ஸ்ரீ ராமானுஜரின் ஸஹஸ்ராப்தி (1000-மாவது திருநக்ஷத்திர) மஹோத்ஸவம் வரும் 2017-ஆம் ஆண்டு நடைபெறுவதை முன்னிட்டு புராதானமானதும், மிக உன்னதமுமான ஸ்ரீமதாஹோபில மடத்தின் ஸ்ரீமாலோல பீடத்தை அலங்கரிக்கும் நடமாடும் ஸ்ரீந்ருஸிம்ஹரான அஸ்மத் ஆசார்யன்

HH 46வது பட்டம் ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்வாமியான ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கரின்

சரணாரவிந்தங்களில் அடியோங்களின் மிக எளிமையான சமர்ப்பணமாக இந்த அஷ்டோத்தர சதநாமாவளியை ஸமர்ப்பிக்கிறோம்.

||ஆழ்வார், ஆசார்யர், எம்பெருமானார் திருவடிகளே சரணம் ||

1) **அட்டைப்படச்சித்திரம் வரைந்து உதவியவர்** ஸ்ரீமதி க்ருபா முகுந்த் (சிங்கப்பூர்)

2) **நிழற்படங்கள் உதவி** - நெடுந்தெரு ஸ்ரீ முகுந்த் ஸ்ரீநிவாஸன் ஸ்வாமி, நெடுந்தெரு ஸ்ரீ திவாகர் கண்ணன் ஸ்வாமி மற்றும் அநுதினம் வலைதள நிழற்பட தொகுப்பாளர்கள்.

||அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி||



श्रीमालोलः

(श्रीमदहोबिल मठम्)



श्रीकृष्णः
(श्रीमदहोबिल मठम्)



श्रीरामानुजार्यः

(श्रीमदहोबिल मठम्)



स्वामि श्रीनिगमान्त महादेशिकः - काञ्चीपुरम्

# अनुक्रमणिका

आचार्य श्रीमुखम्

श्रीरामानुजार्य अष्टोत्तरशत नामावलिः 1 - 13



श्रीमते श्रीवण्शठकोप श्रीरङ्गनाथ यतीन्द्र महादेशिक:


HH 46வது பட்டம் ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன்

ஸ்வாமியான ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர்

## SRI AHOBILA MATH

Camp. Car Street, Thiruvendipuram,
Pin:- 607 401,
Cuddalore Dist.

॥ श्रीः ॥



॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ॥

॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंह दिव्य पादुका सेवक श्रीवण्शठकोप श्री नारायण यतीन्द्र महादेशिकाय नमः ॥

Date:-07.10.2016

ஸந்து ஸ்ரேயாம்ஸி.

அநாதியான நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமானது பல யுகங்களிலும் மஹரிஷிகளால் ப்ரவர்த்தனம் செய்யப்பட்டு இக்கலியுகத்தில் ஸ்வாமி நம்மாழ்வார் தொடக்கமாக ஸ்ரீமந் நாதமுனிகளாலும், ஸ்ரீஆளவந்தார் மூலமாகவும் பகவத் இராமானுஜரால் நன்கு நிலை பெற்றது என்பதை ஸ்வாமி ஸ்ரீதேசிகன் "த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை:" என்று போற்றுகிறார். அப்படிப்பட்ட பெருமைவாயந்த பகவத் ஸ்ரீஇராமானுஜருடைய ஆயிரமாவது ஸம்வத்ஸரத்தை கொண்டாடும் பாக்யத்தை நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம். இதை கருத்தில் கொண்டு நம் ஸ்ரீஸந்நிதியில் மிகுந்த பக்தியுடைய ஸ்ரீமான்.வரதாசாரி ஸ்ரீசடகோபன் (USA) ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரின் பெருமைகளை நன்கு விளக்கும்படியான ஸ்ரீராமானுஜசார்ய அஷ்டோத்தர சதநாமாவலி யை தொகுத்து நாம் எல்லோரும் ரஸித்து அனுபவிக்க தொகுத்துக் கொடுத்திருக்கிறார். இதற்கு இணையாக தமிழ் ஆக்கத்தையும் ஸ்ரீமான் திருச்சித்ரகூடம் அரங்கன் திருநாராயணன் மூலமாகவும் அளித்திருக்கிறார்.

நாம் இதை படித்துப்பார்த்து ரஸித்து அனுபவித்தோம். ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் இந்த ஆயிரமாவது ஸம்வத்ஸரத்தில் இதை வாங்கி அனுபவித்து ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரருடைய அநுக்ரஹத்தையும், ஸ்ரீமாலோனுடைய அநுக்ரஹத்தையும் பெறவேண்டும் என்றும், ஸ்ரீமான்.வரதாசாரி ஸ்ரீசடகோபனுக்கு ஸகல க்ஷேமங்களும் ஏற்பட அநுக்ரஹிக்கிறோம்.

[signature]

H. H. THE JEER OF
SRI AHOBILA MUTT.

Camp:
H. H. THE JEER OF
SRI AHOBILA MUTT
Thiruvendipuram

Central Office: 30, Venkatesa Agraharam, Mylapore, Chennai-600004 Email:azhagiyasingarsam@gmail.com



श्री रामानुजार्य: - तिरु एव्वुळ्

श्री:

श्रीमते रामानुजाय नमः

# श्रीरामानुजार्य नामावलिः (अष्टोत्तरशत)

உப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ உ வே வ.சடகோபய்யங்கார் (ந்யூயார்க்) இயற்றியது.

தமிழாக்கம் இணை:

திருச்சித்ரகூடம் அரங்க.திருநாராயணன், ஸ்ரீரங்கம்.

ओं (ॐ)

1) नित्य-कैङ्कर्य-श्रीलक्ष्मण-मुनये नम: |

யாண்டும் இறைத்தொண்டாற்றும் இலக்குவமுனிவருக்கு வந்தனம்.

2) श्री य़तिराजाय नम: |

துறவித்தலைவர்க்கு வந்தனம்.

3) त्रिजगत् पुण्यफल स्वरूपाय नम: |

மூவுலகின்அறப்ப(ல)ழமானவர்க்கு வந்தனம்.

4) स्वाधीनपतिकाश्रुतिसूक्तिकर्त्रे नम: |

மறைமடந்தைக்கு மணாளனாகத்தன் இன்சொற்களை ஆக்கியவர்க்கு வந்தனம்.

5) अच्युतपदमन्तरा सर्वं तृणाय यो मेने तस्मै श्रेष्ठाय नमः |

அச்யுதனின் திருவடிஅன்றி மற்றவற்றைப்புல்லென ஒதுக்கிச்சிறந்தவர்க்கு வந்தனம்.

6) शरणागतेरविरताकृते नम: ।

இடைவிடாத தஞ்சத்திற்குக்காரணமானவர்க்கு வந்தனம்.

7) माता पिता बन्धु: गुरु:सखा विद्या द्रविणमिति सर्वं ब्रह्मेति चिन्तितवते नम:।

தாய், தந்தை, உற்றார், ஆசிரியர், நண்பர், கல்வி செல்வம் என அனைத்தும் இறைவனே

தான் என நினைத்தவர்க்கு வந்தனம்.

8) परभक्तिपरज्ञानपरमभक्तिवर्धकाय नम: ।

உயர்ந்ததும் மிக உயர்ந்ததுமான இறைப்பற்றையும், இறையறிவையும் வளர்த்தவர்க்கு வந்தனம்.

9) श्रीयामुनार्यसुधांभोधिभक्तियोगप्रदर्शकाय नम: ।

ஆளவந்தாரின் அமுதக்கடலானஇறைப்பற்றைக்காட்டித்தந்தவர்க்கு வந்தனம்.

10) नम: संयमीन्द्राय ।

புலனடக்கியவர்க்கெல்லாம் தலைவர்க்கு வந்தனம்.

11) भूमादेवी-केशवसोमयाजी-दम्पत्योःसत्सुताय नम: |

பூமாதேவீ கேசவஸோமயாஜீ தம்பதியர்க்குத் தோன்றிய தவப்புதல்வர்க்கு வந்தனம்.

12) उन्निद्र-पद्म-सुभगोपदेश-मुद्रा-हस्ताय नम: |

அலர்ந்த தாமரை அழகொடு அறிவுரைஅளிக்கும் திருக்கரமுடையவர்க்கு வந்தனம்.

13) जगतां अत्यहितछेदिनां संयमिनां पतये नम: |

உலகத்தவர்க்கு இன்னலை நீக்கும் புலனாள்வாருக்குத்தலைவரான உடையவருக்கு வந்தனம்.

14) हरिपद मकरन्द स्यन्दि ग्रन्थ कर्त्रे नमः ।

இறைவனின் திருவடிகளின் மகரந்தத்தேனொழுகும் நூல்களை ஆற்றியவர்க்கு வந்தனம்.

15) भवमरु-परिखिन्न-भक्त-खेद-भञ्जनाय नम:।

வாழ்க்கை எனும் பாலைவனத்தில் துன்புறும் பக்தரின் தொல்லைகளை நீக்கியவர்க்கு வந்தனம்.

16) माया शर्वरी बालसूर्याय नम :।

மாயை எனும் இரவுக்கு இளங்கதிரோனானவர்க்கு வந்தனம்.

17) श्रोत्र दिव्य औषध-सदृश- प्रबन्ध दायिने नम: ।

செவியில் திவ்யத்தேனினிய நூற்களாக்கியோருக்கு வந்தனம்.

18) त्रिभुवन तम: प्रत्यूषारुणाय नम: ।

மூவுலகின் இருளுக்கு ஒளி தரும் விடிகாலை விளக்குக்கு வந்தனம்.

19) शुद्धानन्दवर्षक नव सूक्ति-दायिने नम: ।

தூய்மையான மகிழ்ச்சியைப்பொழியும் ஒன்பது சிறந்த நூல்களை அளித்தவர்க்கு வந்தனம்.

20) निरुपधि रङ्गवृत्ति रसिक-नियन्त्रे नम: ।

கட்டற்ற அரங்கனின் ரஸிகர்க்குக் கட்டுப்பாட்டைக் கற்றுத்தந்தவர்க்கு வந்தனம்.

21) काञ्चीराजतनूजाक्रान्तपिशाचभावनिवर्तिने नम: ।

காஞ்சீஅரசனின்மகளை ஆட்கொண்ட பேய்த்தனத்தைப்போக்கியவர்க்கு வந்தனம்.

22) जाह्नवीस्नानयात्रोत्सुकाय नम : ।

கங்கைப்புனிதக்குளியலுக்காகப் பயணிக்க விரும்பியவர்க்கு வந்தனம்.

23) करतलधृतपरब्रह्मविचक्षणाय नम: ।

மிக உயர்க்கடவுளைக்கைக்கொண்டபண்டிதர்க்கு வந்தனம்.

24) अशेष श्रुति पथ संवित्ते: प्रसत्ति-दान-कृपालवे नम: ।

முழுமறைமரபில் அறிவை அடையும் வழியைக்காட்டித்தந்த கருணை வள்ளலுக்கு வந்தனம்.

25) श्रुत्यपार्थ-निवारकाय नमः ।

மறைசொல்லுக்கு விபரீதப்பொருளைத் தடுத்தவர்க்கு வந்தனம்.

26) निजमुखेन सुधियामनवरत प्रज्ञा दायकाय नम : ।

தானே முன்வந்து மனமுவந்து எப்போதும் கூரறிவைத்தந்த கொடைக்கு வந்தனம்.

27) प्रज्वलित जीव जीवातव प्रबन्ध दायिने नम: ।

எரியும் உயிர்க்கு உயிரூட்டும் அமுதமாக விளங்கும் சொற்குவியலை அளித்தவர்க்கு வந்தனம்.

28) रङ्गेश भक्तजन मानस राजहंसाय नम: ।

அரங்கனுடைய பக்தரின் மனத்தில் பறக்கும் சிறந்த அன்னப்பறைவைக்கு வந்தனம்.

29) निगम-गरिमाण-फणितिप्रदात्रे नम :

மறையின் ஆழத்தை எளிதில் தந்த வாக்காளருக்கு வந்தனம்.

30) महिमोल्लसित-सुमनसां स्वसूक्तिमुखेन आनन्द-वर्धकाय नम: ।

இறைப்பெருமையை அறிந்த பூப்போன்ற மனதுடைய அறிஞரின் பேரானந்தத்தை வளர்ப்பவர்க்கு வந்தனம்.

31) शिष्य-श्रोत्र-कुहरे सुधासार-निषिञ्चन-पटवे नम: ।

மாணாக்கரின் செவிக்குகையில் அமுதமூற்றும் அறிஞர்க்கு வந்தனம்.

32) यति-क्षोणि-भर्तु: परम पवित्र पाद युगळाय नम: ।

துறவியரசர் தூய திருவடியிணைக்கு வந்தனம்.

33)सकल जगदेन: प्रशमनानुग्रह हस्ताय नम: ।

எல்லா உலகத்தின் குற்றங்களைக்களைந்து அருளும் திருக்கரமுடையவர்க்கு வந்தனம்.

34) स्वामि वेदान्त देशिकेन वन्दित पवित्र पादाय नम: ।

வேதாந்த தேசிகர் வணங்கும் தூய திருவடிக்கு வந்தனம்.

35) करिशैल कृष्ण जलद- पादाम्भोज-रसिकाय नम: ।

யானைமலையின் மீது உள்ள கருமுகிலின் திருவடித்தாமரையை ரஸிப்பவர்க்கு வந்தனம்.

36) वृष-पृथ्वीधर-पतिना बहुमानिताय नम : ।

அரசன் வ்ருஷன் என்பவனால் பலவாறாக கௌரவிக்கப்பட்டவர்க்கு வந்தனம்.

37) त्रिदश वन्दित वैभवाय नम : ।

வானோரும் வணங்கும் சிறப்புக்கு வந்தனம்.

38) अज्ञ-जनस्य क्षेमङ्कराय नम: ।

பாமரர்க்கும் நன்மை தருபவர்க்கு வந்தனம்.

39) वैराग्य शिखामणये नम : ।

பற்றற்றவர்க்குத் தலைவரானவர்க்கு வந்தனம்.

40) विबुधाधिराज पद पद्म मधु प्रवाहे निमग्नाय नमः ।

தேவராஜனின் திருவடித் தாமரைத் தேனாற்றில் மூழ்கியவர்க்கு வந்தனம்.

41) श्रीभाष्यकार-प्रथमाय नम : ।

ஸ்ரீப்ரஹ்மஸூத்ரபாஷ்யம் அருளியவர்க்கெல்லாம் தலைவர்க்கு வந்தனம்.

42) नारायण शिखरि कूटस्थ करुणावरुणालय प्रभु प्रियाय नम: ।

நாராயண மலையுச்சியில் விளங்கும் கருணையாழியின் அன்பருக்கு வந்தனம்.

43) अञ्जलि बद्ध हस्ताय नम: ।

திருக்கரம்கூப்பித்திகழ்பவர்க்கு வந்தனம்.

44) सकल कल्याण गुण संपन्नाय नम: ।

எல்லா நல்லபண்புகளின் உறைவிடமானவர்க்கு வந்தனம்.

45) मोहान्धकार विनिवर्तन निपुणाय नम : ।

குழப்பமெனும் இருளை நீக்கிய நிபுணருக்கு வந்தனம்.

46) अकिञ्चन चेतन संरक्षणे जागरूकाय नम : ।

கைம்முதலற்ற உயிர்களைக்காப்பதில் விழிப்புடையவர்க்கு வந்தனம்.

47) त्रिवर्गपथ वर्तिनां करग्रहणप्रभवे नम: ।

முக்திவழிசெல்பவர்க்கு எளிதாக அடையக்கூடிய தலைவர்க்கு வந்தனம்.

48) त्रिगुण-युक्त-कातराणां हस्तावलम्बन दीक्षिताय नम: ।

முப்பண்புகளைக்கொண்ட கோழைகளுக்கு கைகொடுப்பது என்ற விரதம் பூண்டவர்க்கு வந்தனம்.

49) रङ्गभूरसिक स्वामिन: अभिमान पुत्राय नम : ।

ரங்கபூரஸிகஸ்வாமிக்கு அபிமான புத்திரனாய்த்திகழும் ஆசார்யஸார்வபௌமருக்கு வந்தனம்.

50) किरातरूपेण श्रीवरदेन काञ्चीप्रापिताय नमः ।

வேடன் வேடத்தில் எம்பெருமானால் காஞ்சியில் கொண்டு சேர்க்கப்பட்ட எம்பெருமானார்க்கு வந்தனம்.

51) पुण्यकोटिविमानान्तस्स्थितयागबेरप्रियाय नमः ।

புண்யகோடிவிமானத்தின் உள்ளே வீற்றிருக்கும் வேள்விப்பெருமானின் அன்பருக்கு வந்தனம்.

52) रसिक महिते रङ्ग आस्थाने नित्यवास प्रियाय नम: ।

ரஸிகர்களால் பெருமைப்பட்ட(ரஸிகர்களைப்பெருமைப்படுத்தும்) அரங்க அவையில் என்றும் வாழ வேட்கையுடையவர்க்கு வந்தனம்.

53) अञ्जन गिरिनाथ अत्यन्त भक्ताय नम : ।

மைமலைத்தலைவனின் அந்தரங்க அன்பருக்கு வந்தனம்.

54) शेषाद्रि शिखरे श्रीमद् रामायण कालक्षेप कृताय नम: ।

சேஷாத்ரிமலைமுகட்டில் ஸ்ரீமத்ராமாயண காலக்ஷேபம் செய்தவர்க்கு வந்தனம்.

55) ऋषि सार्वभौम प्राचेतसानुगृहीताय नम: ।

முனிப்பேரரசர் வால்மீகி அருளுக்குப் பாத்திரமானவர்க்கு வந்தனம்.

56) अव्याज वत्सल अतिकारुण्य सिन्धवे नम : ।

காரணமின்றி(எதிர்பார்ப்பு இல்லாமலே) காருண்யம் காட்டும் கடலுக்கு வந்தனம்.

57) सुचरित्र  सुन्दरगात्र प्रभवे नम : ।

தூயவரலாறுடைய அழகுத் திருமேனிஉடையவரின் தலைவருக்கு வந்தனம்.

58) संसारवारिनिधि सन्तरण विषये परम पोताय नम: ।

வாழ்க்கைக்கடலைக்கடக்க உதவும் சிறந்த கப்பலுக்கு வந்தனம்.

59) पाञ्चरात्रिकनयेन वैखानसेन च आराधित स्वामिने नम:

பாஞ்சராத்ரம் வைகானஸம் எனும் ஆகமங்களால் போற்றப்படுபவர்க்கு வந்தனம்.

60) मानातिलङ्घि सुखबोध महाम्बुराशये नम : ।

அளவு மீறிப் பேரானந்த அறிவூட்டும் பெருங்கடலுக்கு வந்தனம்.

61) पद्माभिराम वदनेक्षण पाणि पादाय नम: ।

தாமரையை வெல்லும் திருமுகமண்டலம், அருட்பார்வை, திருக்கரங்கள், திருவடிகள் கொண்டவர்க்கு வந்தனம்.

62) पर्वत शिखरोज्वल पारिजाताय नम : ।

மலையுச்சியில் மிளிரும் பாரிஜாதத்துக்கு வந்தனம்.

63) श्री चन्द्रपुष्करिणी तटाश्रित श्री रामानुजाय नम: ।

சந்த்ரபுஷ்கரிணீ கரையில் வாழ்ந்த உடையவருக்கு  வந்தனம்.

64) श्री भूतपुरी क्षेत्र अवतार वैभवाय नम : ।

ஶ்ரீபெரும்பூதூர் க்ஷேத்ரத்தில் அவதரித்த சிறப்புக்கு வந்தனம்.

65) श्रीशैल नम्भि भागिनेयाय नम : ।

ஶ்ரீசைல நம்பி மருமகருக்கு வந்தனம்.

66)  वकुळारण्य क्षेत्रे गृहस्थ रूपेण भासमानाय नम: ।

மதுராந்தக திவ்ய க்ஷேத்ரத்தில் இல்லறமே நல்லறமாக இசைபட வாழ்ந்தவர்க்கு வந்தனம்.

67) अत्र महापूर्णेन अनुगृहीताय नमः ।

இங்கு மஹாபூர்ணரால் (பெரிய நம்பி) அருளப்பட்டவருக்கு வந்தனம்.

68) आसूरि कुल तिलक श्रीकेशव सोमयाजी पुत्राय नमः ।

ஆஸூரி குல திலகமான ஸ்ரீகேசவஸோமயாஜீ நல்ஸந்ததிக்கு வந்தனம்.

69) पिङ्गल संवत्सरे चित्रा मास शुक्ल पक्ष पञ्चमी तिथ्यां आर्द्रा नक्षत्रे अवतीर्ण -पुरुषाय नमः।

பிங்கள ஆண்டு சித்திரை மாதம் வளர்பிறை ஐந்தாம் நன்னாளில் திருவாதிரை விண்மீனில் அவதரித்த பெரியவருக்கு வந்தனம்.

70) पुण्यकोटि विमान छाया समीप-कृत-वासाय नमः ।

புண்யகோடி விமான நிழலில் அருகே வாழ்ந்தவர்க்கு வந்தனம்.

71) अर्थितार्थि परिदान दीक्षित श्रीवरदराजेन अनुगृहीत तुरीय आश्रम अनुसन्धान आचार्य स्वामिने नम : ।

வேண்டியவர்க்கெல்லாமெல்லாம் தரத்தயாரான ஸ்ரீவரதராஜனால் அருளப்பட்டு நான்காம் நிலையான துறவு பூண்ட ஆசார்யருக்கு வந்தனம்.

72) सर्व सामुद्रिका लक्षण संपन्नाय नमः ।

எல்லா அவயவ அழகு இலக்கணம் ஒருங்கே அமையப்பெற்றவருக்கு வந்தனம்.

73) दया पूर्ण मनसा यादव प्रकाश रक्षकाय नमः ।

இரக்கம்பொங்கும் உள்ளத்துடன் யாதவப்ரகாசரைக் காத்தவருக்கு வந்தனம்.

74) श्रुति वाक्य समीचीनार्थ प्रकाशकाय नम : ।

மறைப்பொருளை உள்ளது உள்ளவாறே பரப்பியவருக்கு வந்தனம்.

75) लक्ष्मण योगिनःपत्रमकरी मुद्रा लाञ्छित पद युगाय नमः ।

இலக்குவயோகியின் , மீன் இலச்சினை இலங்கும் திருவடியிணைக்குவந்தனம்.

76) काञ्चीपूर्णात्  श्रीवरदराजस्य षड्वाक्य गृहीताय नम: ।

காஞ்சீபூர்ணரிடமிருந்து ஸ்ரீவரதராஜனின் ஆறு சொற்றொடர்களை அறிந்தவருக்கு வந்தனம்.

77) कूरेशादि शिष्य बृन्देन सेविताय नम: ।

கூரேசர் முதலான மாணவர் குழுவால் வணங்கப்பட்டவருக்கு வந்தனம்.

78) श्रीरङ्गे उडयवर्  इति पुराण पुरुषेण संमानिताय नम: ।

பெரியபெருமாளால் ஸ்ரீரங்கத்தில் உடையவர் என மதிக்கப்பட்டவருக்கு வந்தனம்.

79) गोष्ठीपुराचार्येण एम्पेरुमानार्  इति नव बिरुदा अनुगृहीताय नम : ।

கோஷ்டீபுர ஆசார்யரால் எம்பெருமானார் எனும் sobriquet புதிய சாட்டுப் பெயரைப் பெற்றவருக்கு வந்தனம்..

80) परम वैदिक सिद्धान्त स्थापनाय नम: ।

தலைசிறந்த மறைக்கொள்கையை நிறுவியவருக்கு வந்தனம்.

81) त्रिभि: दण्डै :  मण्डिता , त्रय्यन्त संरक्षिणी  सा तस्यै रामानुज मूर्तये नम: ।

முக்கோலால் அழகுற்றவளும் மறை மூன்றையும் காப்பவளுமான அந்த இராமானுச மூர்த்திக்கு வந்தனம்.

82) “चेल्लप्पिळ्ळाय् इङ्गे वारुम्” इति उक्तमात्रे हस्तगतश्रीरामप्रियाय नम : ।

”செல்லப்பிள்ளாய் இங்கே வாரும்” என அழைத்த போதே ஸ்ரீராமப்ரியன் திருக்கரத்தில் வந்தவருக்கு வந்தனம்.

83) प्रपन्नजन पाथेयं , प्रपित्सूनां रसायनम् इति स्तुत श्री रामानुजाय नम: ।

தஞ்சமடைந்தவர்க்கு வழி உணவு, தஞ்சமடைய நினைப்பவர்க்கு உற்சாக பானம் என்று போற்றப்படக்கூடியவருக்கு வந்தனம்.

84) तिरुक्कुरुङ्कुडि वैष्णव नम्पिनानुगृहीताय नम: ।

திருக்குறுங்குடி வைஷ்ணவ நம்பியின் அருளைப்பெற்றவருக்கு வந்தனம்.

85) श्री वेङ्कटेशेन स्वीकृत शङ्ख--चक्र समर्पणकैङ्कर्याय नम: ।

ஸ்ரீனிவாஸப்பெருமாளால் ஏற்கப்பெற்ற சங்கம் சக்ரம் வைத்துப்பணி புரிந்தவருக்கு வந்தனம்.

86) भगवद् विषय ग्रन्थ सृष्टि कारणाय नम: ।

பகவத்விஷயம் எனும் நன்னூல் வெளிவரக்காரணனுக்கு வந்தனம்.

87) कर्नाटके श्री साळग्राम इति नवीन अग्रहार निर्मात्रे नम: ।

கர்நாடகத்தில் ஸாளக்ராமத்தில் நூதன அக்ரஹாரம் நிறுவியவருக்கு வந்தனம்.

88) कर्नाटके श्री विष्णुवर्धन देव रायेण पूजिताय नम: ।

கர்நாடக ப்ரதேசத்து அரசன் ஸ்ரீவிஷ்ணுவர்தன தேவராயனால் தொழப்பட்டவருக்கு வந்தனம்.

89) दिल्ली तुरुष्क राज गृहात् राम प्रियं तिरुनारायण पुरं आनीत स्वामिने नम: ।

டில்லி துலுக்க அரச அரண்மனையிலிருந்து இராமனின் அன்பனை (ராமப்ரியன்) திருநாராயணபுரத்துக்கு அழைத்துவந்தவருக்கு வந்தனம்.

90) अपार विज्ञान दयापूरित लोचन सुन्दराय नम: ।

எல்லையற்ற இறையறிவும், கருணையும் நிறைந்துள்ள நேர்த்தியான திருக்கண்களையுடையவர்க்கு வந்தனம்.

91) षडङ्ग योग निपुणाय नम: ।

மறையின் ஆறு உறுப்புக்களையும் ஒருங்கே இணைத்த நிபுணருக்கு வந்தனம்.

92) शरणागति मार्ग प्रदर्शिने नम: ।

புகலடைய வழி கோலியவருக்கு வந்தனம்.

93) करिशैल नाथ पाद अरविन्द परीवाह रस प्रवाहे निमग्न स्वामिने नम : ।

கரிகிரித்தலைவனின் திருவடித்தாமரைத்தேனாற்று வெள்ளத்தில் மூழ்கியவருக்கு வந்தனம்.

94) दयाजलधि:, मधुर:, क्षमावान् इति वन्दित प्रभवे नम: ।

இரக்கக்கடல், இனிமையே உருவானவர், பொறுமையில் பூமி என்றெல்லாம் வணங்கப்பட்ட தலைவருக்கு வந்தனம் வந்தனம்.

95) श्रीरङ्गनाथ पादकमले प्रपतनानुष्ठान- कर्त्रे नम : ।

ஸ்ரீரங்க நாதனின் தாமரைத் திருவடிவாரத்தில் ப்ரபத்தியைப் பின்பற்றிக் காட்டியவருக்கு வந்தனம்.

96) मुमुक्षु जन रक्षक स्वामिने नमः ।

முக்தியை விரும்புபவரின் காப்பாளருக்கு வந்தனம்.

97) कैङ्कर्य-लब्ध करणत्रय सामरस्य सुखानुभव प्रदर्शिने नमः ।

தொண்டால் மனம், மெய், மொழி ஆகிய மூன்றையும் சேர்த்து வரும் பேரின்பம் துய்த்தவருக்கு வந்தனம்.

98) तमिस्रशमन नित्य ग्रन्थ दायिने नम : ।

மன இருளைப்போக்கும் நித்ய க்ரந்த படைப்பாளிக்கு வந்தனம்.

99) करिशैलनाथ करुणा परिणामात् सकल सौभाग्यवते नम : ।

கரிமலையரசனின் தயவால் எல்லா நலனும்பெற்றவருக்கு வந்தனம்.

100) प्रणतानां कृते सौशील्यसागराय नमः ।

தஞ்சமடைந்தவரிடம் வேற்றுமை பாராட்டாப்பண்புக்கடலுக்கு வந்தனம்.

101) सर्व वचसां अवसान सीमं हस्तीश एव मोक्ष फलं इति प्रदर्शित स्वामिने नमः ।

எல்லா சொற்களுக்கும் எல்லை நிலமான ஸ்ரீவரதராஜனே முக்திக்கு முடிவு என்று காட்டியவருக்கு வந்தனம்.

102) महा निगम वृक्ष छाया रसिक स्वामिने नमः ।

மறை எனும் பெரிய மரத்தின் நிழலைத்துய்க்கும் தலைவருக்கு வந்தனம்.

103) नित्यं परम् सर्वगतं सुसूक्ष्मं निष्पन्द नन्दथुमयं भगवद् स्वरूपं इति घोषण कर्त्रे नमः ।

நிலையானது, உயர்ந்தது, எல்லாஇடத்திலும் இருப்பது , மிக நுண்ணியமானது,

இமைக்காமல் பேரின்பம் துய்க்கக்கூடியது இறைவன் உருவமென உரக்கப்பேசியவருக்கு வந்தனம்.

104) नागाचलेश विशेष अभिमान पुत्राय नम: ।

அரவமலைக்கரசனின் வேண்டிய திருமகனார்க்கு வந்தனம்.

105) षडूर्मिबहुळ जलधि तरणेन ईप्सितार्थ लक्ष्याय नम: ।

ஆறு அலைகள் நிறைந்த வாழ்க்கைக்கடலைக்கடந்து விருப்பம் விழையும் நோக்கமுள்ளவருக்கு வந்தனம். (அறு பகைவர்)

106) अनीश्वराणां कृते परम् पारं गन्तुं अभङ्गुर सेतवे नम: ।

இயலாதவர்க்காகவே அடுத்த கரை சேர, உடையாத, அணைக்கும் பாலத்துக்கு வந்தனம்.

107) स्वाभाविक दयापूरित वदन भगवन् ! तुभ्यं नम: ।

இயற்கையாக இருக்கும் இரக்க திருமுகமண்டலமுடையவரே ! தங்களுக்கு வந்தனம்.

108) श्रीरङ्ग दिव्यदेशे , श्रीरङ्गराज सङ्कल्पात् नित्यवासिने श्री रामानुजाय नम: ।

ஸ்ரீரங்க திவ்யதேசத்தில் அரங்கனின் பேரருளாலே யாண்டும் வாழும் திருமேனிஉடையவர்க்கு வந்தனம்.

त्वदनुग्रहात् प्राप्त-अभिलाषवतामस्माकं तव पद पद्मे आत्मान्त कैङ्कर्य रसं वर्धय !

தேவரீரின் அருளால் விருப்பம் எனும் ஸத்தையைப்பெற்ற அடியோங்களுக்குத் தேவரீர் திருவடித்தாமரையில் கோதற்ற தொண்டு புரியும் ஆர்வத்தை வளர்ப்பீராக !

त्वदेक-तन्त्रान् त्वदन्यं नानुवर्तनीयानस्मान् आदरेण परिपालय !

தேவரீரையேப்புகலாகக்கொண்டவரும், தேவரீரைத்தவிர வேறு எவரையும் பற்றாத அடியோங்களை பரிவுடன் காப்பீராக !

श्रीभूतपुरि भाग्यम् , कल्याणानां अविकल निधिम् , श्रीरामानुजं भजामः ।

ஸ்ரீபெரும்பூதூர் செய்த நல்வினைப்பயனே உருவானவரும், மங்களங்களுக்கெல்லாம் குறைவற்ற பொற்கிழியானவருமான இராமானுசரைப்பணிவோமாக !

अस्पृष्टचिन्ता-पदं आभिरूप्यम् न: मानसे निरन्तरं सन्निधत्ताम् !

சிந்தையாலும் எட்ட இயலாத ஒரு திருமேனிஉருவம் நம் மனதில் எப்பொழுதும் குடிகொண்டிருப்பதாக !

आचार्य श्रेष्ठ, भगवन् रामानुज ! दयापरवशस्य भवत: पादरविन्दे शरणं गतास्स्मः ! प्रभो !

ஆசார்யர்கள் மாணிக்கமே ! இறைவா இராமானுசா ! இரக்க குணத்திற்கு அடிமையான தேவரீர் செந்தாமரைத் திருவடியிணையில் தஞ்சம் புகுந்தோம், தலைவா!

अनपाय विभूति कामै: आहूतं त्वां नित्यं अनुस्मराम !

இடரில்லாச்செல்வம் விழைபவரால் அழைக்கப்படும் தேவரீரை நாம் எப்போதும் நினைந்திருப்போம் !

आचार्य सार्वभौम ! तव सुन्दर गात्रं अन्तर्मानसं सततं सन्निधेया: !

ஆசார்யர்களுக்குள் பேரரசே ! தேவரீரது அப்ராக்ருதத்திருமேனி ஆழ்மனதில் என்றும் நிலைத்திருப்பதாக !

भूतपुरि क्षेत्र जातं त्वां मम लोचनै: अनुदिनं निर्विशेमहि !

ஸ்ரீபெரும்பூதூர் திவ்ய க்ஷேத்ரத்தில் அவதரித்த தேவரீரை யாம் கண்களால் நாளும் துய்ப்போம் !

"मान्य-यतीश्वर महानस संप्रदाय: " सन्ततं जयतु

மதிப்பிற்குரிய எதிராசரின் மடைப்பள்ளி ஆசாரம் என்றும் வெல்லட்டும்

जयति यतिराजसूक्ति: जयति मुकुन्दस्य पादुकायुगली ।
तदुभय-धनास्त्रिवेदीमवन्ध्ययन्तो जयन्ति भुवि सन्त :॥ (ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் 1008)

श्रीरामानुजार्य नामावलिः (अष्टोत्तरशत) संपूर्णा

உப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ உ வே வ.சடகோபய்யங்கார் (ந்யூயார்க்) இயற்றியது.

தமிழாக்கம்: இணை: திருச்சித்ரகூடம் அரங்க.திருநாராயணன், ஸ்ரீரங்கம்.

शुभम्





श्री रामानुजार्यः - काञ्चीपुरम्